Part 14.     11—7—'41 (28—11—116

தமிழ் மணி B.A., ...ிய

# திருக்குறள்

## விரிவுரையும் - வியாசமும்.

வார வெளியீடு.

அதிகாரம் கச   ஒழுக்கமுடைமை.



திருவள்ளுவர்.

உரையாசிரியரும், பதிப்பாசிரியருமாகிய

தருமபுரம், N. M. ராஜன்.

Rights reserved]     [விலை அணா 1.

தமிழ்த்தியாகராயரெனப் போற்றப்படும் இசைத் தமிழ்ச் செல்வர்

**உயர்திருவாளர் T. இலக்குமணன் பிள்ளை B. A.,**

அவர்கள் [illegible] கூர்ந்தளித்த

## ப[illegible]ர.

இப்பெரும் உலகத்[illegible]ள ஜாதியாரிடையிலும் மதத்தாரிடையிலும் எழுந்து வ[illegible]ருகின்ற நீதிநூல்கள் யாவற்றுள்ளும் தலைசிறந்த திருவள்ளுவ நாயனாரியற்றிய திருக்குறளின் விழுமிய கருத்துக்களைக் கசடறக் கற்றறிந்தவர், அவர் பிறப்பிடமாகிய இத்தமிழுலகத்திலேயே மிகச்சிறுபான்மையர் என்றே எண்ணுகிறேன். சாதாரண ஜனங்களில் அத்தகையோரைக் காண்பது அரிதிலும் அரிதே. அந்நிலைமையில், தமிழ் மக்களில் உயர்ந்தோரும் ஏனையோரும் அக்கருத்துக்களை உணர்ந்து கடைத்தேறுமாறு எளிய இனிய தமிழ் நடையில் திருக்குறளுக்குப் பதவுரை, விரிவுரை, வியாசங்களுடன் வார வெளியீடு வருமாறு உபகரிக்கின்ற திருவாளர் N. M. ராஜன் அவர்களுடைய முயர்சி பாராட்டத்தக்கதே. கைம்மாறு வேண்டா இம்முயற்சியை மனமுவந்து போற்றி ஆதரிப்பது தமிழ் மக்களின் கடமையாகும். இம்முயற்சியின் பயனைத் தமிழ் மக்கள் யாவரும் பெற்று நலனடையும்வண்ணம் எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுகின்றேன்

3—7—1941, தி. இலக்ஷ்மணப் பிள்ளை.
நாகர்கோவில்.

திருவனந்தபுரம் ஸயன்ஸ் காலேஜ் தமிழ் விரிவுரையாளர்

**உயர்திரு. C. பன்னிருகைபெருமாள் முதலியார் M.A., B.L.,**

அவர்கள் அன்புவந்தளித்த

## ஆசியுரை

அன்புள்ள ஐயா!

தாங்கள் அனுப்பின திருக்குறள் வார வெளியீடுகளைப் படித்தேன். சாதாரண ஜனங்களும் திருக்குறட்பாட்டுகளின் பொருளைத்தெளிவாக அறிந்துகொள்ளுமாறு பதவுரை, கருத்துரை, விரிவுரைகள் மிக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் ஒவ்வொரு கிராமப் புத்தகசாலையிலும் இடம் பெறுவது அவசியமாகும். திருவிதாங்கூரிலுள்ள கிராமப் புத்தகசாலைகளுக்குப் பட்டிகை தயாரிக்கப்படும்போது தங்கள் வெளியீட்டை ஞாபகத்தில் வைத்து வேண்டியதைச் செய்வேன்.

23-12-1116 தங்கள் அன்புள்ள,
Trivandrum சி. பன்னிருகைபெருமாள்.

சென்னை யூனிவர்ஸிற்றி தமிழாராய்ச்சித்துறை ஆசிரியர்

உயர்திருவாளர், ராவ் சாஹிப்

S. **வையாபுரிப்பிள்ளை** B.A., B.L., அவர்கள்

அன்போடளித்த

## மதிப்புரை

திருக்குறள் விரிவுரையும் வியாசமும் என்ற வெளியீட்டின் பகுதியொன்றைப் பார்வையிட்டேன். அதில் எளிய நடையில், பலருக்கும் விளங்கக்கூடியபடி, பதப்பிரிவு பதவுரை கருத்துரை விரிவுரையென்ற முறையில், திருக்குறளுக்கு உரை எழுதி வெளியிட்டிருப்பதுகண்டு மகிழ்கிறேன். ஆசிரியர் பரிமேலழகரது உரை கற்றோர்க்கேயன்றி ஏனையோர்க்கு எளிதில் பொருள் விளங்கக்கூடியதன்று. அவரது உரையினை அடிப்படையாகக்கொண்டு புத்துரை ஒன்று எழுதி வெளியிடவேண்டுவது மிக்க அவசியமான நன் முயற்சியேயாகும். பல நூல்களிலிருந்தும் பிற சமயக்கோட்பாடுகளிலிருந்தும் அங்கங்கே மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் பயன்படக்கூடியதாகும். பரந்த நோக்குடைய இக்காலத்தார்க்கு இது ஒரு நல்விருந்தாகவேயமையுமென்பதில் ஐயமில்லை. இந்நன் முயற்சியை மேற்கொண்டு நடத்திவரும் திருவாளர் N.M. ராஜன் அவர்களுக்கு இறைவன் எல்லா நன்மைகளையும் அருள்புரிவாராக.

2—8—1941,
மைலாப்பூர்.

S. வையாபுரிப்பிள்ளை

தமிழ்த்தியாகராயரெனப் போற்றப்படும் இசைத் தமிழ்ச் செல்வர்

உயர்திருவாளர் **T. இலக்குமணன் பிள்ளை** B. A.

அவர்கள் கூர்ந்தளித்த

## ப[illegible]ர.

இப்பெரும் உலக[illegible] ஜாதியாரிடையிலும் மதத்தாரிடையிலும் எழுந்து வ[illegible]குகின்ற நீதிநூல்கள் யாவற்றுள்ளும் தலைசிறந்த திருவள்ளுவ நாயனாரியற்றிய திருக்குறளின் விழுமிய கருத்துக்களைக் கசடறக் கற்றறிந்தவர், அவர் பிறப்பிடமாகிய இத்தமிழுலகத்திலேயே மிகச்சிறுபான்மையர் என்றே எண்ணுகிறேன். சாதாரண ஜனங்களில் அத்தகையோரைக் காண்பது அரிதிலும் அரிதே. அந்நிலைமையில், தமிழ் மக்களில் உயர்ந்தோரும் ஏனையோரும் அக்கருத்துக்களை உணர்ந்து கடைத்தேறுமாறு எளிய இனிய தமிழ் நடையில் திருக்குறளுக்குப் பதவுரை, விரிவுரை, வியாசங்களுடன் வார வெளியீடு வருமாறு உபகரிக்கின்ற திருவாளர் N. M. ராஜன் அவர்களுடைய முயற்சி பாராட்டத்தக்கதே. கைம்மாறு வேண்டா இம்முயற்சியை மனமுவந்து போற்றி ஆதரிப்பது தமிழ் மக்களின் கடமையாகும். இம்முயற்சியின் பயனைத் தமிழ் மக்கள் யாவரும் பெற்று நலனடையும்வண்ணம் எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுகின்றேன்

3—7—1941,
நாகர்கோவில்.

தி. இலக்ஷ்மணன் பிள்ளை.

திருவனந்தபுரம் ஸயன்ஸ் காலேஜ் தமிழ் விரிவுரையாளர்

உயர்திரு. **C. பன்னிருகைபெருமாள் முதலியார்** M.A., B.L

அவர்கள் அன்புவந்தளித்த

## ஆசியுரை

அன்புள்ள ஐயா!

தாங்கள் அனுப்பின திருக்குறள் வார வெளியீடுகளைப் படித்தேன். சாதாரண ஜனங்களும் திருக்குறட்பாட்டுகளின் பொருளைத்தெளிவாக அறிந்துகொள்ளுமாறு பதவுரை, கருத்துரை, விரிவுரைகள் மிக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் ஒவ்வொரு கிராமப் புத்தகசாலையிலும் இடம் பெறுவது அவசியமாகும். திருவிதாங்கூரிலுள்ள கிராமப் புத்தகசாலைகளுக்குப் பட்டிகை தயாரிக்கப்படும்போது தங்கள் வெளியீட்டை ஞாபகத்தில் வைத்து வேண்டியதைச் செய்வேன்.

23—12—1116
Trivandrum

தங்கள் அன்புள்ள,
சி. பன்னிருகைபெருமாள்.

சென்னை யூனிவர்ஸிற்றி தமிழாராய்ச்சித்துறை ஆசிரியர்

உயர்திருவாளர், ராவ் சாஹிப்

**S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L., அவர்கள்**

அன்போடளித்த

# மதிப்புரை

திருக்குறள் விரிவுரையும் வியாசமும் என்ற வெளியீட்டின் பகுதியொன்றைப் பார்வையிட்டேன். அதில் எளிய நடையில், பலருக்கும் விளங்கக்கூடியபடி, பதப்பிரிவு பதவுரை கருத்துரை விரிவுரையென்ற முறையில், திருக்குறளுக்கு உரை எழுதி வெளியிட்டிருப்பதுகண்டு மகிழ்கிறேன். ஆசிரியர் பரிமேலழகரது உரை கற்றோர்க்கேயன்றி ஏனையோர்க்கு எளிதில் பொருள் விளங்கக்கூடியதன்று. அவரது உரையினை அடிப்படையாகக்கொண்டு புத்துரை ஒன்று எழுதி வெளியிடவேண்டுவது மிக்க அவசியமான நன் முயற்சியேயாகும். பல நூல்களிலிருந்தும் பிற சமயக்கோட்பாடுகளிலிருந்தும் அங்கங்கே மேற்கோள்கள் எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் பயன்படக்கூடியதாகும். பரந்த நோக்குடைய இக்காலத்தார்க்கு இது ஒரு நல்விருந்தாகவேயமையுமென்பதில் ஐயமில்லை. இந்நன் முயற்சியை மேற்கொண்டு நடத்திவரும் திருவாளர் N.M. ராஜன் அவர்களுக்கு இறைவன் எல்லா நன்மைகளையும் அருள்புரிவாராக.

2—8—1941,
மைலாப்பூர்.

S. வையாபுரிப்பிள்ளை

## அதிகாரம்—கச. ஒழுக்கமுடைமை.

ஒழுகு, ஒழுக்கு, ஒழுங்கு, ஒழுக்கம்—சொல் தோற்றம் காண்க; நேர்மையாக நடத்தல் ஒழுக்கமாகும். ஒழுக்கம் என்று சொல்லும்போது அது நல்லொழுக்கம் என்னும் பொருளையே நல்குவதாகின்றது. இது தமிழ் மரபு. சுருங்கக் கூறினால் நன்னடை என்பதே ஒழுக்கத்தின் பொருளாகும். வடமொழியாளர் இதனை ஆசாரம் எனக் கூறுவர். ஆங்கிலத்தார் Character–Conduct – Morality என்னும் சொற்களால் ஒழுக்கத்தின் பொருளைத் தெரிவிப்பர்.

இவ்வொழுக்க நெறியுடன் நடப்பதற்கு மனம், மொழி மெய்களை அடக்கிச் செலுத்த வல்லவர்க்கே இயலுமாதலால் அடக்கமுடைமையின் பின் கூறப்படுகின்றது.

க. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

பதப்பிரிவு: ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பதவுரை:

ஒழுக்கம் = நன்னடைக்கையானது
விழுப்பம் = (ஒருவனுக்கு) உயர்ந்த சிறப்பினை
தரலால் = தருவதனால்
ஒழுக்கம் = நேர்மை நடக்கையானது
உயிரினும் = உயிரைப்பார்க்கிலும்
ஓம்பப்படும் = (ஒருவன்) காப்பாற்றற்குரியதாம்.

கருத்துரை: ஒழுக்கம் ஒருவனுக்கு மெய்யான மேன்மையைக் கொடுப்பதால் உயிரைவிடவும் உயர்வுடையதாகும்.

விரிவுரை: ஒருவன் "நல்வாழ்க்கை" உடையோன் என்று சொல்லப்படுதல் அவனது நன்னடக்கையினாலன்றி கல்வி, செல்வம், ஆற்றல், பதவி முதலியவற்றின் பெருக்கத்தினாலன்று.

அண்ணுமலைநகர் அண்ணுமலை பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராசிரியர்

உயர்திருவாளர் **கா. சுப்பிரமணிய பிள்ளை** M.A., M.L.,

அவர்கள் மனமுவந்தளித்த

## வாழ்த்துரை

திருவாளர் N. M. ராஜன் அவர்கள் வெளியிட்டுள்ள திருக்குறள் விரிவுரைப்பகுதியை நான் பார்த்தேன். அது திருக்குறட்கருத்துக்களை கற்ருரும் மற்ருரும் அறிந்துக்கொள்ளும்படி எளிய நடையில் தெளிவாக விளங்குந்தன்மையது தற்காலப்போக்கிற்கு ஒத்த முறையில் அது அமைந்திருக்கிறது. அது தமிழன்பர் ஆதரவைப் பெறுதற்குரியது.

5—8—1941,
Annamalai University,
Annamalai Nagar.

கா. சுப்பிரமணிய பிள்ளை,
தமிழ்ப்பேராசிரியர்.

சிதம்பரம் அண்ணுமலை நகர் அண்ணுமலை பல்கலைக் கழகம்
தமிழ் விரிவுரையாளரும் தேன் பொழியும் நாவலருமாகிய

உயர்திருவாளர் **பண்டித ந. மு. வெங்கடசாமி நாட்டார்**

அவர்கள் ஆர்வமுடன் அனுப்பிய

## மதிப்புரை

திருவாளர் N. M. ராஜன் என்பவர்களால் வாரந்தோறும் வெளியிடப் பெறும் திருக்குறள் உரையின் கஉ-வது பகுதியாகிய "நடுவு நிலைமை" உரையினைப் படித்துப் பார்த்தேன். தெளிவாகவும் விரிவாகவும் எழுதப்பட்டுள்ள இவ்வுரை எழுதினோரின் சிறந்த கல்வியையும், பரந்த நோக்கத்தையும் உலகியலறிவையும் புலப்படுத்துகின்றது. சில இடங்களில் வள்ளுவர் கருத்து இதுவெனக் கொள்ளற்கியலாது எனினும் தாம் நல்லவெனக் கருதியமுடிவுகள் இவ்வுரை வாயிலாக எழுதுவோரால் வெளியிடப் படுகின்றன எனக்கொள்வது தவறன்று. எப்படியும் இவ்வுரை திருக்குறட்ப் பயிற்சியை மிகுவித்து பயன் விளைக்குமென்பது என் கருத்தாகும்.

9-8-1941
2659 இராஜகோபாலசாமி
கோவில்தெரு, தஞ்சாவூர்.

ந. மு. வெங்கடசாமி நாட்டார்.

## அதிகாரம்—கச. ஒழுக்கமுடைமை.

ஒழுகு, ஒழுக்கு, ஒழுங்கு, ஒழுக்கம்—சொல் தோற்றம் காண்க; நேர்மையாக நடத்தல் ஒழுக்கமாகும். ஒழுக்கம் என்று சொல்லும்போது அது நல்லொழுக்கம் என்னும் பொருளையே நல்குவதாகின்றது. இது தமிழ் மரபு. சுருங்கக் கூறினால் நன்னடை என்பதே ஒழுக்கத்தின் பொருளாகும். வடமொழியாளர் இதனை ஆசாரம் எனக் கூறுவர். ஆங்கிலத்தார் Character–Conduct – Morality என்னும் சொற்களால் ஒழுக்கத்தின் பொருளைத் தெரிவிப்பர்.

இவ்வொழுக்க நெறியுடன் நடப்பதற்கு மனம், மொழி மெய்களை அடக்கிச் செலுத்த வல்லவர்க்கே இயலுமாதலால் அடக்கமுடைமையின் பின் கூறப்படுகின்றது.

க. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

பதப்பிரிவு: ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

பதவுரை:

ஒழுக்கம் = நன்னடைக்கையானது
விழுப்பம் = (ஒருவனுக்கு) உயர்ந்த சிறப்பினை
தரலால் = தருவதனால்
ஒழுக்கம் = நேர்மை நடக்கையானது
உயிரினும் = உயிரைப்பார்க்கிலும்
ஓம்பப்படும் = (ஒருவன்) காப்பாற்றற்குரியதாம்.

கருத்துரை: ஒழுக்கம் ஒருவனுக்கு மெய்யான மேன்மையைக் கொடுப்பதால் உயிரைவிடவும் உயர்வுடையதாகும்.

விரிவுரை: ஒருவன் "நல்வாழ்க்கை" உடையோன் என்று சொல்லப்படுதல் அவனது நன்னடக்கையினாலன்றி கல்வி, செல்வம், ஆற்றல், பதவி முதலியவற்றின் பெருக்கத்தினாலன்று.

ஒழுக்கம் என்பதை ஆசாரம் என்று வடமொழிப் பொருளால் வர்ணாச்சிரம முறைகளின்படி ஒழுகுந் தன்மை எனக் கொள்வதனால் அது ஓர் குறுகிய கொள்கை போன்று தோன்றச் செய்துவிடுகின்றது. ஆனால் ஆசாரம் என்பது எதுவென "ஆசாரக்கோவை" யுள் அறைந்திருப்பதை நோக்கினால் இவ்வையத்திற்கு மிடமில்லையென்பதைக் காண்க.

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோடு
ஒப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.

இதனால் நல்ஒழுக்கமெல்லாம் ஆசாரமாகும்: ஆனால் ஆசாரமெல்லாம் நல்ஒழுக்கமாவதில்லை என்பதைக் கவனிக்கவும் எனவே மனிதவர்க்க முழுவதும் எந்நாட்டிலும் எக்காலமும் சமமாகத் தழுவியொழுக வேண்டுவதையே நம் தெய்வப்புலவர் "ஒழுக்கம்" எனக் கூறினாரெனக் கொள்ளல் வேண்டும்.

மக்கள் ஒவ்வொருவரும் தாம் நல்லவரென மதிக்கப்படவே விரும்புகின்றனர். மகா துன்மார்க்கிகள் கூடத் தங்களைப் பிறர் நல்லவரெனக் கருத அவாவுறுகின்றனர். இங்ஙனம் அனைவர்க்கும் தெரிந்தோ தெரியாமலோ "நல்லவன்" என்பதில் ஓர் நாட்டம் இருந்து வருகின்றது. ஆனால் நல்லவராகப் பயில்வதில் மட்டும் பின்னடைவர். ஏனெனில் மனம் பொறி புலன்களின் போக்கில் நடப்பது எளிது: அது சுகமாய்த் தோன்றுகிறது; அவைகளை கட்டுப்பாடுடன் செலுத்துவதில் சிரமம் உண்டாவதனால் அது துன்பமாகக் கருதப்படுகிறது. நல்லவை, சுகம் இரண்டிற்குமுள்ள வேற்றுமை விளங்காமல் குழப்பமடையநேர்கின்றது. "சுகவிருப்பே நமைத் தொழும்பு செய்பந்தம்" என்ற மனோன்மணீய வாக்கை உய்த்துணரல் வேண்டும்.

ஒழுக்க நெறியின் உறைவிடம் மனச்சான்ருகும். மனதை முதலில் பண்படுத்தற்கெனவே அன்பு அடக்கம் முதலியவற்றை ஆசிரியர் முன்னர் விளக்கிஞர். அன்பு, நடுவுநிலைமை, அடக்கம் முதலியவற்ருல் பண்பட்ட மனதையுடைய ஒருவன் சகல கலா வல்லவஞகவும், கோடீசுவரஞகவும், ஏகச்சக்ராதிபதியாகவும் இருந்தாலும் நல்லொழுக்கத்திஞலேயே அவை பூரணச் சிறப்பையடைய இயலுமென்பதை நன்குணர்வான். அத்தகைய விழுமிய ஒழுக்கம் நழுவ நேரிடின் தான் அரிதில் பெற்ற செல்வம் பதவி முதலிய எதனையும் இழக்கச் சித்தமாவதுடன் தனதுயிரையுங்கூட விட்டுவிடத் துணிவான். ஆதலால் "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றுரைத்தார்.

பொன்னும் புகழும் பாரினில் உள்ளோர்க்குப் பிரியமாகும்; ஆஞல் நந்நெறியில் நாடி நல்லொழுக்கத்தில் நடந்தாலன்றி அவை நன்மையாகாது.

சீன வேதம்.

நமக்கு உணவும் உடையும் அவசியமாக இருப்பதைவிட நல்லொழுக்கம் அவசியமானது.

மகாத்மா.

---

உ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

பதப்பிரிவு: பரிந்து ஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்து ஓம்பித்
தேரினும் அஃதே துணை.

பதவுரை:

ஒழுக்கம் = நன்னடக்கையை
பரிந்து = (மிகப்)பரிவுடன்
ஓம்பி = (எத்தனை இடர் நேரினும் நழுவவிடாமல்) பேணி
காக்க = காப்பாற்றவேண்டும்
தெரிந்து = (பல அறங்களை) ஆராய்ந்து
ஓம்பி = பேணிப்(பயின்று)

தேரினும் = நோக்கினும்

அஃதே = நல்லொழுக்கமே

துணை = (இம்மை மறுமைகளுக்கு மெய்யான) துணையாகும்.

கருத்துரை: ஒழுக்கத்தினை மிக வருத்தப்பட்டாயினும் பேணிக் காத்தல் வேண்டும்; பல அறங்களை கூர்ந்து சோதித்தாலும் ஒழுக்கமே ஒருவனுக்கு உற்ற துணையாவதாம்.

விரிவுரை: சாதாரணமாக ஒருவனுடைய பிரதான சிந்தனை தான் எப்படியாகவேண்டுமென்பதாகவில்லை. தான் எப்படிப் பிறரால் எண்ணப்படுவோம் என்பதாகவே இருக்கின்றது. தனது வாழ்விற்கு எது நன்மை என்பதைவிட எது சுகமாயிருப்பது என்றே எண்ணப்படுகிறது. பொதுப்படப் பேசுங்கால் மக்கள் நல்வாழ்க்கையைப் பெறுதற்கான ஒழுக்கத்தினைப் பயிலத் தவறியிருப்பதுமன்றி, அவ்வாறு தவறி நடக்கின்றோமென்பதை அறியாமலும் இருக்கின்றார்கள். எவ்வினையும் நேர்மைபற்றி ஒழுகவேண்டுமென்பதே இயற்கை நியதியின் நோக்கம். அதற்கு மாறுபட நடப்பவனுடைய வாழ்க்கை இன்னலடைவது இயல்பு. ஆனால் மனம் பொறி புலன்களோ கட்டுள்ளடங்காது வழி தவறிச் செல்லுந் தன்மையனவாம். அவைகளை கருங்கல்லில் வேலை செய்கிற பொறுமையுள்ள சிற்பியைப்போன்று நல் நினைப்புக்களாலும் நற்செயல்களாலும் இடையீடின்றிப் பயிற்றினாலொழிய ஒழுக்கம் நழுவி விடுமாகையால் "பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம்" என்றார். இவ்வண்ணம் அடக்கமுடன் பயில்வது பிரயாசையாகவும் துன்பமாகவும் எண்ணி அறநெறியில் ஏதேனும் குறுக்கு வழிகள் உண்டாவெனக் குடைந்து ஆராய்ந்தாலும் நல்லொழுக்கத்தினையன்றி வேறு மார்க்கம் காண்பதரிது. எனவே "தெரிந்துஓம்பி—தேரினும் அஃதே துணை" என அறைந்தார்.

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

ஆசாரக்கோவை

கல்வி கற்கும் மாணவன் தனது பாடங்களைச் சரியாகப் படியாத காலமெல்லாம் துக்கத்தில் அமிழ்ந்திருப்பதுபோல வாழ்வின் மாணவன் நல்லொழுக்கத்தினைப் பேணுமல் ஒழுங்கீனமாக வாழ்வானுயின் துன்பத்திலிருந்து தப்புவதில்லை.

ஜேம்ஸ் ஆலன்

---

௩. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

பதப்பிரிவு: ஒழுக்கம் உடைமை குடிமை, இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

பதவுரை:

ஒழுக்கமுடைமை = (ஒருவனுடைய) நன்னடக்கையே
குடிமை = (அவனது உயர்) குலமாகும்.
இழுக்கம் = (ஒழுக்கத்தில் நின்று) தவறுதல்
இழிந்த பிறப்பாய்விடும் = தாழ்ந்த பிறப்பாய்விடும்.

கருத்துரை: ஒழுக்கமே உயர் குலமாம்.

விரிவுரை: சாதி வர்ணம், வகுப்பு முதலிய வேற்றுமைகள், நிலம், நிறம், தொழில் முதலியவற்ருலானவை. அதனுல் அவை ஒன்றுக்கொன்று மேல் கீழென மதிப்பதற்கில்லை. ஆனுல் ஒவ்வொருவரும் தம் குலத்தினை உயர்வாக மதிக்க விரும்புவதியல்பு. குலமும்கூட தனம் கல்வி பதவியாதிகளால் ஓரோ காலத்தில் உயர்வு தாழ்வாக கருதப்பட்டு வருவதைக் காண்போம். ஆயினும் ஓர் குலமானது ஆண் பெண்களின் நல்லொழுக்கங்களால் உயர்ச்சியாகுமேயன்றி, தனம், பதவி பரம்பரையாதிகளால் மேன்மையாவதில்லை. அதனுல் "ஒழுக்கம் உடைமை குடிமை" என்றுரைத்தார். ஒழுக்கம் வழுவிய ஒருவன் வேறெவ்

விதப் பெரும் ஆக்கமுடையவனாயிருந்தாலும் தாழ்ந்து விடுவது உறுதியாகும். திவ்விய உடம்பைப் பெற்றவர்களெனப்படும் தேவர்களும் அவர்கள் தலைவர்களும்கூட அறநெறி வழுவிய காரணத்தால் தமது அரிய பதவிகளில் நின்று இழிவடைந்த வரலாறுகளை அறிவோம். ஆகவே "இழுக்கம்—இழிந்த பிறப்பாய் விடும்" எனக் கூறினார்.

ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று

நல்வழி

இழிந்த சாதியராயினும் புண்ணிய மியற்றிற்
கழிந்த மேன்மைகூர் சாதியராகுவர் கடையா
ஒழிந்த பாதகம்இயற்றுநர் உயர்ந்தவ ரெனினும்
பொழிந்த தீமைசால் புலைத்தொழிற் புன்மையராவர்

காசி ரகசியம்

---

௪. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பதப்பிரிவு: மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.

பதவுரை:

ஓத்து=(மனனம்பண்ணின) மறைமொழியை
மறப்பினும்=(ஓர்மறையவன்) மறந்தானாயினும்
கொளலாகும்=(திரும்பவும் மனனம் செய்து) [பெறஇயலும்
பார்ப்பான்=(ஆனால் ஓர்) வேதியன்
பிறப்பு=(வேதமுணர்ந்ததனால் அடைந்த உயர்) [பிறப்பானது
ஒழுக்கம் குன்ற=நல்லொழுக்கம் வழுவியதும்
கெடும்=(இழிந்து)கெட்டுவிடும்.

கருத்துரை: ஓர் மறையோன் மறைமொழியை மறந்துவிடினும் திரும்பவும் கற்றுணர இயலும்; ஒழுக்கத்தில் நின்று வழுவினனாயின் இழிந்தவனாய் விடுவான்.

விரிவுரை: விடுதலையடைந்து பூரண சுதந்திர இன்பம் பெறுதற்கு ஆன்றோர் வாயிலாகப் பக்குவநிலையில் ஓதப்பெறும் மறைமொழி ஒத்து எனப்படும். ஏனைய உலகியல் கலைகளை கற்பது போலல்லாது மனமாசற்ற தூய உள்ளத்தினால் இத்தத்துவ உண்மை மொழியானது ஓதப்படுவதனால் அதனை ஓதுபவர் உயர்வுடையவராவர். அத்தகைய அந்தணர் அரிய மறைமொழியை மறப்பதே அருமையாகும். ஒருக்கால் அதனை மறக்க நேரினும் திரும்பவும் பக்குவமடைந்து பயின்றெய்தல் கூடும். ஆனால் ஒழுக்கத்தில் நின்றிழிந்த ஒருவனது பிறப்பு மீளவழியின்றி அத்தோடு இழிந்து அழிவதுண்மையானது பற்றி "பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" எனப் பகர்ந்தார்.

ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்"
கொன்றைவேந்தன்.

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை
முதுமொழிக்காஞ்சி.

ஒழுக்கம் இலனாகி ஒத்துடைய னேனும்
புழுப்பொதிந்த புண்ணிற் கொடிதாம்—கழுக்கிரையை
ஓம்பிமற் றென்னை உறுதிக்கண் நில்லாக்கால்
தேம்பி விடுதலே நன்று.   அறநெறிச்சாரம்.

---

ரு. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

பதப்பிரிவு: அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பதவுரை:

அழுக்காறு = பொறாமை
உடையான்கண் — உடையவனிடத்தே
ஆக்கம்போன்று = செல்வம்(நில்லாதது) போன்று
ஒழுக்கம் = நன்னடக்கை
இலான்கண் = இல்லாதவனிடத்தே
உயர்வு = மேன்மையானது
இல்லை = இல்லாது போய்விடும்,

கருத்துரை: பொருளை யுள்ளவனிடம் செல்வம் நில்லாதது போல ஒழுக்கமில்லாதவனிடத்தே உயர்வு இல்லை.

விரிவுரை: மனிதவாழ்க்கை "உண்பதுவும் உறங்குவதுமாக முடியும்" என்றெண்ணி ஒருவன் சீவித்திருப்பதில் மட்டும் திருப்திகொள்வதில்லை. இன்புற்றிருத்தல் வேண்டும்; அதுவும் அயலவரினும் மேற்பட்ட இன்பம் பெறல்வேண்டும்; இதுவன்றியும் இன்பத்தினையும் தியாகம் செய்து உயர்வுபெற விரும்புதலே முக்கிய விருப்பமாகும். ஆனால் அவ்வுயர்வு நல்லொழுக்கத்தினாலன்றி மற்றெதனாலும் ஒருவன் பெறற்கரியதாகும். ஆதலால், "இல்லை—ஒழுக்கம் இலான்கண் உயர்வு" என்றார். இதனை தெளிவுற தெரிவிப்பதுடன் ஒருவனுடைய உயர்வைக் கெடுப்பதில் பேர்பெற்ற தீக்குணம் ஒன்றின் தன்மையை விளக்குமுகத்தால் உவமித்துரைத்தது அருமையானதாம். பிறாது கல்வி செல்வமாதிகளைக் கண்டு பொருமையுடன் புழுங்கும் ஒருவனிடமிருந்து அவை அறவேயொழிந்துவிடுமென்பதை யாவரும் உணரத் தகுந்த எடுத்துக்காட்டாக "அழுக்காறு உடையான்கண் ஆக்கப்போன்று" என்று அழகுடன் நவின்றார் 'இல்லை' என்பதை ஈரிடத்தும் சேர்க்குக.

> அழியா ஒழுக்கத்தின் மிக்கதூஉ மில்லை
> பழியாமல் வாழும் திறம்.

அறநெறிச்சாரம்

௬. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

பதப்பிரிவு: ஒழுக்கத்தில் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

பதவுரை:

உரவோர் = மனவலிமையுடையோர்

ஒழுக்கத்தில் = நல்லொழுக்கத்தில் நின்று

ஒல்கார் = சுருங்கமாட்டார்கள்
இழுக்கத்தின் = ஒழுக்கவீனத்தினால்
ஏதம் = (தடுப்பதற்கரிய) குற்றம்
படுபாக்கு = உண்டாதலை
அறிந்து = (நன்றாக) உணர்ந்து

கருத்துரை: பெரியோர் ஒழுக்க வீனத்தால் இழிவடைந்து விடுவதை நன்கறிந்து ஒழுக்கத்தில் குறைவுபடார்.

விரிவுரை: "weakness is sin" என்று சுவாமி விவேகானந்தர் இடித்திடித்து கூறுதலியற்கை. உடல் வலியும் முக்கியமாக மனவலியுமற்றவர்கள் ஒழுக்க வீனத்தினால் இழிவும் துன்பமும் உண்டாகுமெனத் தெரிந்தும்கூடதமது பலவீனத்தினால் கண்டதே காட்சி கொண்டதேகோலமாக பராமுகமுடன் நடந்து பாபத்திற்காளாகித் துன்புறுவதியல்பு. அங்ஙனமன்றி இழிநெறியால்வரும் இடர்களைநன்குணர்ந்து நல் நினைப்புக்களால் பயிற்சிபெற்ற நேரியநெஞ்சமுடைய சான்றோர் மலைபோன்ற எதிர்ப்புக்கள் வரினும்தாம் ஒழுக்க நெறியில் நின்று அணுவும் தளரார் ஆதலால், "ஒழுக்கத்தி னொல்கார் உரவோர்" என்றுரைத்தார்.

நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்.

நீதிநெறி விளக்கம்.

---

எ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

பதப்பிரிவு; ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.

பதவுரை:

ஒழுக்கத்தின் = நன்னடக்கையினாலேயே
மேன்மை = மேம்பாட்டை (எல்லாரும்)

எய்துவர் = அடைவார்கள்
இழுக்கத்தின் = (ஒழுக்கத்தில்) தவறுவதனால்
எய்தாப்பழி = (தாம்) அடைவதற்கு உரியதல்லாத [பழியையும்
எய்துவர் = அடைந்து விடுவார்கள்.

கருத்துரை: நல்லொழுக்கத்தினால் அனைவரும் உயர்வடைவர்; அதில் தவறுவதனால் தாம் செய்யாத பழியையும் அடைய வேண்டுவதாகும்.

விரிவுரை: மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மேன்மை பெறுதற்கு நல்லொழுக்கத்தாலன்றி வேறெவ்வித அரிய செயல்களைச் செய்தாலும் அடைய வியலாதென்பது உறுதியாம். ஆனால் ஒழுக்கம் தவறுவதனால், மேன்மை பெற இயலாது போவதுடன் நின்று விடுவதில்லை. தாம் புரியாத பாவத்தின் பழியினையும் பெறவேண்டுவதாய் விடுகின்றது. ஓரிடத்தில் திருட்டு கொலை முதலியன நிகழுங்கால் ஆங்கு இயல்பாகவே ஒழுக்கவீனராய்த்திரியும் சிலர் அக்குற்றங்களை உண்மையில் செய்யாதவர்களாயிருந்தாலும் அவர்கள் சந்தேகிக்கப்பட்டு அவர்களை குற்றவாளிகளாக்குவதும், அந்நிகழ்ச்சியில் அவர்கள் நிரபராதிகளாயிருந்தும் தண்டனைக்கும் பழிக்கும் ஆளாவதும் இயல்பாகும், எனவே "இழுக்கத்தின்—எய்துவர் எய்தாப்பழி என்றார்.

நல்லவை செய்யி னியல்பாகுந், தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும். நாலடியார்.

---

அ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

பதப்பிரிவு: நன்றிக்கு வித்தாகு(ம்) நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

பதவுரை:
நல்லொழுக்கம் = (ஒருவனது) நன்னடக்கையானது
நன்றிக்கு = அறத்திற்கு
வித்தாகும் = காரணமாகும்
தீயொழுக்கம் = கெட்டநடக்கையானது

என்றும் = எக்காலமும்
இடும்பை = துன்பத்தை
தரும் = தருவதாகும்.

கருத்துரை: நல்லொழுக்கம் ஒருவனுக்கு அறத்தின் காரணமாயிருக்கின்றது; தீயொழுக்கம் தீமையினையே கொடுப்பதாகும்.

விரிவுரை: உலகியலுள், அழிக்கமுடியாத ஓர் உண்மை எதுவெனில் "வினைக்குத்தக்கபடி விளைவு" என்பதாகும். நன்றாகப் பண்படுத்தப்பட்டு வளமும் வித்துமிட்டு நீர் பாய்ச்சிப் பேணுத நிலம் நல்விளைவை கொடாதென்பதை தெளிவாகக் காண்போம். பேணிப் போற்றுத உடம்பு நோய் வாய்ப்படுவதையும் அறிவோம். இவ்விதி உடம்பைப் பொறுத்ததாயினும் மனதைப் பொறுத்ததாயினும் முற்றும் பொருந்துவதாம். ஆனால் ஒருவன் நல்லொழுக்கமுடையவனாக நடிப்பானானால் அந்நேரம் வெளிப்படக்காணப்படும் பயனிலிருந்து எளிதில் கண்டு பிடிக்கமுடியாது. ஏனெனில் நல்லொழுக்கம் தீயொழுக்கங்களின் பயன்கள் பக்குவமாகி வெளிப்படுவதற்கு சிறிது காலம், வேண்டப்படும். அதனால் அந்நேரம் காணப்படும் பயன்களைக்கொண்டு காண்பதற்கில்லையாயினும் நல்லொழுக்கப் பண்புக்கள் ஒழுங்காகவும் முறைப்படியும் அமைந்து நிலைத்த ஒருவனிடம் அறமாகிய பயன் என்றும் காண்பது உறுதியாகும். எனவே "நன்றிக்கு வித்தாகு(ம்) நல்லொழுக்கம்" என நவின்றார். அங்ஙனமல்லாது தீயொழுக்கமானது செயலிலும் செய்கையின் பின்னும் எக்காலத்திலுமே இடுக்கண் விளைவித்த வண்ணமாகவே இருக்குமாகையால் "தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" என்று இயம்பினார்.

பிரபஞ்சத்தை யாளும் தத்துவம் ஒழுங்கேயன்றிக் குழப்பமன்று: வாழ்க்கையின் உயிர் நிலை அறமேயன்றி மறமன்று; நேர்மையான ஒழுக்கத்தினாலேயே அறம் தோன்றும்.

ஜேம்ஸ்ஆலன்

"திறிவொக்கும் தீதி லொழுக்கம்" நான்மணிக்கடிகை.

௯. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

பதப்பிரிவு: ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்

பதவுரை:

ஒழுக்கமுடையவர்க்கு = நல்லொழுக்கமுள்ளவர்களுக்கு
தீய = தீமையான (சொற்களை)
வழுக்கியும் = மறந்தும்
வாயாற்சொலல் = வாயினால் கூறுதல்
ஒல்லா = முடியாவாம்

கருத்துரை: நல்லொழுக்கமுடையார் தவறியும் தீய மொழிகளைப் புகலார்.

விரிவுரை: ஒருவன் எதைக் காவாவிடினும் நாவினைக் காத்தல் வேண்டுமென்பது முன் அதிகாரத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. "உத்தமர்கள் மொழிய அஞ்சுவார்கள்; ஏனெனில், செயலில் சீர் குன்றுவோம் என்னும் கூச்சம் அவர்கள் காட்சியில் உள்ளது" எனச் சீனப்பெரியார் கூறியுள்ளதற்கிணங்க ஒழுக்கமுடையோர் சொல்லின் அருமையையும் செயலின் பெருமையையும் நன்றாக உணர்வாராதலால் ஒழுக்கத்தின் முக்கிய அங்கமான மொழியினைத் தனக்கும் பிறர்க்கும் தீமையும் வருத்தமும் விளைவியாத விதம், அடக்கமுடன் பேசும் பயிற்சி பெற்றிருப்பரானதுபற்றி "ஒல்லாவே தீய—வழுக்கியும் வாயால் சொலல்" எனப் புகன்றார்.

கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து

நாலடியார்

ம. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்

பதப்பிரிவு: உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவு இலாதார்

பதவுரை:

உலகத்தோடு = உலகிலுள்ளாரோடு
ஒட்ட = பொருந்தும்படியாக
ஒழுகல் = நடக்கவேண்டுதலை
கல்லார் = (தெரிந்து) கற்காதவர்கள்
பல = பலவிதமான அறநூற்களை
கற்றும் = (வருந்திக்) கற்றவராயினும்
அறிவிலாதார் = விவேகமில்லாதவரேயாவார்கள்.

கருத்துரை: உலக நிலையை உணர்ந்து அதற்குப் பொருந்த நடக்க அறியாதவர் பல நூல்களைக் கற்றும் கல்லாதவர்களேயாம்.

விரிவுரை: வாழ்க்கையில் ஒழுங்கு, ஒழுக்கம் என்பன ஒருவனுக்குத் தன்னைமட்டிலும் சார்ந்துள்ளதன்று: பிறரையும் பாதிப்பதாகும். அறநெறியின் சாரம் பிறர்க்கு இதம் புரிதல் என்பதே. "பிறருக்கு வருத்தந்தரக்கூடிய உண்மையை அவசியமானாலொழிய சொல்வது குற்றமாகும்" என்று மகாத்மா காந்தி அடிகளும் ஒருக்கால் கூறியுள்ளார். நம் தெய்வப் புலவரும் இதனை பலவிடங்களில் விளக்கியிருக்கின்றார். இந்நூலுள் சஎ-வது அதிகாரத்தில் "நன்றாற்றல் உள்ளும் தவறுண்டு அவரவர்—பண்புஅறிந்து ஆற்றாக்கடை" என்றுரைத்திருப்பதை காண்க. ஆகவே உலகினரின் நிலைமையை உணர்ந்து அதற்குத் தகுந்தபடி ஒழுகும் ஒழுக்கமே நன்மைதருவதாம். அங்ஙனமன்றி நீதிபோதனைகளை வாதப்பிரதிவாதங்களால் நுணுகி ஆய்ந்து கற்பதில்மட்டும் நின்று, தாம் செல்லும் வழியே சரியென நடப்பவர் கல்லாதவரெனவே மதிக்கப்படுவர். அதனால் "பலகற்றும்—கல்லார் அறிவிலா தார்" எனப் பகர்ந்தார்.

ஒவ்வொருவனும் தனது மனச்சான்றின்படி நடப்பதாக நினைத்துத் தன் இஷ்டப்படி நடப்பதென்றால், உலகில் குழப்பம் தவிர வேறொன்றும் இராது: வழக்கம் சம்பிரதாயம் அல்லது சன்மார்க்கம் என்று கண்களை மூடிக்கொண்டு நடப்பதானது பலகால் அறத்திற்கு விரோதமாகி அல்லல் விளைவித்துவிடு மென்பதை கவனித்தல்வேண்டும்.

மகாத்மா காந்தி

ஒப்புர வொழுகு
தேசத்தோ டொத்துவாழ்
நாடொப் பனசெய்

ஆத்திசூடி

—:—

## ஒழுக்கத்தின் உயர்வு.

உலக வாழ்க்கையினிடத்து மனம், பொறி புலன்களை அடக்குவதென்றால் அறவே செயல் அற்று அடக்கிவிடுவதன்று. அங்ஙனமாயின் வாழ்க்கைதான் ஏது? அடக்குதல் என்பது நேர் வழியில் அடக்கிச் செலுத்தலேயாம். உயர்ந்த எஃகினால் நன்றாக செய்யப்பட்ட கத்தியானாலும் அதனை உபயோகியாது ஓரிடத்திலிட்டு பூட்டப்படின் அதனால் பயனில்லாது போவதுடன் கெட்டுவிடுமென்பதையும் அறிவோம். அதுபோன்றே அன்பு அடக்கம் நடுவுநிலைமையாதிகளால் பண்பட்ட ஒருவன் உலகிற்கு பயன்படுமாறு ஒழுகினாலன்றி பிறந்த பயன்தானேது?

1. இவ்வுண்மையை உணர்ந்து பண்பட்ட மனம் பொறி புலன்களால் உலகியலில் ஒழுகவாரம்பித்ததும், அந்நேர்மை நடக்கையால் நாமென்றும் பெறாத உயர்வுணர்ச்சி நமக்கேற்படுகின்றது. அதனால் அவ்வொழுக்கத்தினை நம் உயிரினும் பெரிதாகக் கைவிடாதிருக்க விரும்புகின்றோம்.

2. ஆனால் நாம் இச்செவ்விய நெறியில் செல்லுங்கால் கொடிய எதிர்ப்புக்களும் இடையூறுகளும் தோன்றி நம்மைத் திகைப்படையச் செய்கின்றன. உடனே தப்பிக்கவும் குறுக்கு வழி தேடவும் உன்னி நாலாபக்கமும் அருவி நோக்குகின்றோம். எங்கு தேடியும் நாம் செல்லும் நல்லொழுக்க நெறியைத்தவிர வேறில்லையெனத் தெளிவடைந்து விடுகின்றோம்.

3. இதுகாறும் நாம் கல்வி, செல்வம் பதவியாதிகளால் உயர்குலமாகக் கருதப்படுவோமென்றிருந்த நம்பிக்கை நழுவி ஒழுக்கத்தாலன்றி உயர்குலத்தவராகோமென்ற உறுதி உதித்துவிட்டது.

4. முத்திக்கு வித்தான மூல மொழியினை பக்குவமாகிப் பரிவுடன் ஓதி, மலினவுடப்புதானெ புனிதவுடம்பாகிய மறையவரும், நல்லொழுக்கம் நழுவியதும் நலங்குலைந்திழிந்து ஈனராய் விடுதல் இவ்வுலகியல்பென காண்கின்றோம்.

5. இதனால் இங்கும் அங்கும் எங்கும், மங்கா மகிமையுடன் மாண்புறவேண்டின் ஒழுக்கமன்றி வேறொன்றில்லையென்ற உண்மையை உள்ளத்தில் உணர்ந்துவிடுகின்றோம்.

6. எனவே நம்முள்ளம் உரமுற்று இயம்பொணாத இடுக்கண் எங்கு நேரினும் நல்லொழுக்கத்தில் நின்று நழுவா வன்மை வாய்ந்து "கட்டமை ஒழுக்கத்துக்குக் கண்ணுமை"யாராகிவிடுகின்றோம்.

7. இத்தகைய நெஞ்சுறுதியுடன் நேர்மை நடையினை பின்பற்றுவிடில், நாம் கனவிலும் எதிர்பாராத இன்னல்களும் பழிகளும் நம்மை வளைத்து அமிழ்த்திவிடத் துணிந்துநிற்கும் பயங்கரத் தோற்றத்தினைப் பார்க்கின்றோம.

8. ஆகவே நமது நல்வாழ்க்கையின் கருவமைப்பு நல்லொழுக்கமென்பதும் அதனை அழிப்பது ஒழுக்கவீனமென்பதும் நமக்கு நன்றாக விளங்கிவிட்டது.

9. இங்ஙனம் தேர்ந்து தெரிந்தபின் நாம் நவிலும் ஓரோ சொல்லும் பிறருக்கு இதம் தருவதாக இனிமையாகி மாறிவிடுகின்றது.

10. அதுவன்றியும் எவ்வித வேற்றுமைப்பட்ட உலகோரிடமும் பொருந்தும்படியாக நடக்கும் சாமர்த்தியமும் நம்மிடம் உண்டாகிவிடுகின்றது.

நேர்பட வொழுகு!

---

## சுவாமி விவேகானந்தர் உரை.

மனதில் ஒருவகையைச் சேர்ந்த அடையாளங்களே அதிகம் தங்கிவிட்டால், அவை ஒன்றுகூடி வழக்கமாகின்றன. வழக்கங்களே ஒருவனது ஒழுக்கமாகின்றன. அதுவே அவனது இரண்டாவது சொரூபமென்று சொல்லப்படுகின்றது, இன்னும்கூர்ந்து நோக்கினால் ஒழுக்கமே ஒருவனுடைய முதல் (முக்கிய) சொரூபமாகவும், அவனது முழு சொரூபமாகவும் இருக்கிறதென்றுகூடச் சொல்லிவிடமுடியும். ஏனென்றால் ஒருவனுடைய வாழ்க்கையின் நிலைமை முழுமையும் அவனது ஒழுக்கத்தின் பயனேயாகும்.

அதனால் நற்செய்கைகளையே செய்து கொண்டும் இடைவிடாமல் பரிசுத்த எண்ணங்களையே எண்ணிக்கொண்டும் செல்வாய். இழிவையும் துக்கத்தையும் தருவதான அடையாளங்களை அடக்கி நல்வாழ்வைப் பெறுவதற்கு அந்த ஒரே வழிதான் உண்டு.

சகோதரிகட

தற்போது
வியாபாரங்கள் நட...
பிரேம்களைவாங்கிஉபயோகிப்பதற்கு அநேக...
நஷ்டங்களும் கஷ்டங்களும் உண்டு அல்லவா? ஆ...
கள் கம்பெனி பிரேமை வாங்கி நீங்கள் உபயோகியுங்கள்.
எங்கள்கம்பெனி பிரேம் மிகவும் உறுதியும் பாளிஷுமானது.
கைதேர்ந்த தொழிலாளிகளால் தோதகத்தி கம்பினால்
செய்யப்பட்டது. இந்தியாவில் நமது மூதாதையர் வாங்கி
பல பணித்தரங்களுக்கு உபயோகம் செய்து அனுபவம்
கண்ட தோதகத்தி மரம் ஆனதால் உங்களுக்கு அதிகம்
எழுதவேண்டாம் அல்லவா?

## சட்டத்தின் விபரங்கள்

அரை இஞ்சு, முக்கால் இஞ்சு, ஒரு இஞ்சு, ஒன்றே கால் இஞ்சு, ஒன்றரை இஞ்சு ஒன்றேமுக்கால் இஞ்சு, இரண்டு இஞ்சு இரண்டரை இஞ்சு, மூன்று இஞ்சுகள்.

எங்கள் கம்பெனியில் ஆர்டர் செய்தால் குறிப்பிட்ட சமயத்தில் அனுப்பித்தரலாம். மேல் விபரங்கள் அறிய விரும்புபவர்கள் லெட்டர் மூலம் அறிந்துகொள்ளலாம்.

ஆ. சங்கரநாராயணபிள்ளை,
புத்தேரி தெற்குத்தெரு,
நாகர்கோவில் போஸ்ட்டு

திருக்குறள் சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி அண 1 | | | |
| வருடம் ஒன்றிற்கு 52 பிரதிகள் | ரூ. | 3—0—0 | என். எம். ராஜன், C/o தென் இந்தியா அச்சுநிலையம், நாகர்கோவில். |
| திருவிதாங்கூர் அஞ்சல்வழி | ,, ரூ. | 4—8—0 | |
| போஸ்ட் வழி | ,, ரூ. | 5—8—0 | |

Edited & Published by N. M. RAJAN at the South India Printing House, Nagercoil.

... மிகுந்த

... பித் தூளை

... ரும் வாங்கி

**உபயோகிக்கக்கூடாது?**

SRI KRISHNA COFFEE MART,
CAPE ROAD, NAGERCOIL.

---

## செமந்தகா
## ஸ்பெஷல் மின்சார வைரங்கள்.

(ரெஜிஸ்தர் நம்பர் 2827)

தோடு சைஸ் வைரம் 1-க்கு அணு 0—10—0
பேசரி சைஸ் வைரம் 1-க்கு அணு 0—8—0

கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது "செமந்தகா மணி" ஆனல் இவ்வுலக மக்களை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள் ஒன்றே.

N. B. ஆர்டரின்பேரில் குறிப்பிட்ட தவணைக்குள் நகைகள் தயார் செய்து கொடுக்கப்படும்.

Sole Agents:— S. மார்த்தாண்டம் & சன்ஸ்,
கேப் ரோடு, நாகர்கோவில்.

---

THE ROYAL TELEGRAPH SCHOOL,
NAGERCOIL. (TRAVANCORE) :: (ESTD. 1940)

**Trains Candidates in Telegraphy for Postal, Railway & Naval Services**

THE BEST & RELIABLE SCHOOL IN SOUTH INDIA.

Instructor-Ex-Telegraph Official.
Over 80 % trained candidates easily secured jobs.
Apply for admission with 1¼ anna stamp to the Principal